**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

நீங்கள் எந்த வீட்டுக்குள் சென்றாலும், "இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக!" என முதலில் கூறுங்கள்

**(லூக்கா 10:5)**

இதுபோன்ற அற்புதமான, அன்பான வாக்குறுதிகளை அளிக்கும் ஆண்டவருக்கு பதில் அளிக்கும்விதமாக இன்றைய பதிலுரைப்பாடல் அமைந்துள்ளது. "அனைத்துலகோரே, ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்" கடவுளால் மிகவும் அன்புசெய்து பராமரிக்கப்படும் மக்களுக்கு அச்சத்திற்கோ, துயரத்திற்கோ இடமில்லை. நம் உள்ளங்களில் எப்போதும் மகிழ்ச்சியும் நன்றியுணர்வும் நிறைந்திருக்கும்.

திருத்தூதர் பவுல் கலாத்தியருக்கு எழுதிய கடிதத்தில் கிறிஸ்துவின் சிலுவைக்கு மாட்சியும் மகிமையையும் செலுத்துகிறார். " நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அன்றி வேறு எதைப் பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்டமாட்டேன்" என்று கூறுகிறார். கிறிஸ்துவின் சிலுவையில் மட்டும் தான் உலகினரின் வாழ்வைப் புதுப்பிக்கவும், அமைதியில் நிறைவிக்கவும் இயலும்.

இன்றைய நற்செய்தியில் தூதுரைப்பதற்காக இயேசு எழுபத்திரண்டு பேரை அனுப்புகிறார். அவர்கள் மீட்பளிக்கும் நற்செய்தியைத் தூதுரைக்கச் செல்லுமுன் இயேசு அவர்களுக்குக் குறிப்பிட்ட வழிமுறைகளைக் கையாளுமாறுப் பணிக்கிறார். இந்த அறிவுரைகள், அவர்களின் பணியில் அவர்களை வழிநடத்திடவும், கடவுளின் பணியில் அவர்கள் அவரின் கருவிகள் மட்டுமே என்பதை அவர்களுக்கு நினைவூட்டுவதும் ஆகும். எனவே தான் தூதுரைக்கும் பணியில் ஈடுபடும்போது, எப்போதும் பணிவாகவும், கடவுளை முழுமையாகச் சார்ந்தும் இருப்பதும் மிகவும் அவசியம்.

ஆண்டவரின் பணியான மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியுமாக செயல்பட நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அழைப்பு நம் தலைமுறைக்கும் வழங்கப்படுகிறது. நாம் எங்கு சென்றாலும், **நாம் சந்திக்கும் அனைவருக்கும் கிறிஸ்துவின் அமைதியைக் கொண்டு வருவதே நம்முடைய பணி.** ஏனென்றால், கடவுளுடைய வார்த்தை, இன்னும் முழுமையாக நம்மில் பிறக்கக் காத்திருக்கிறது என்பதால், இந்தப் பணியைச் செய்ய நமக்கு தனிப்பட்ட சிறப்புப் பயிற்சியோ, கல்வியோ தேவையில்லை. நம் வாழ்வில் இறைவனின் நற்குணம் ஒளிவீச நாம் செய்யும் முயற்சிகள் தான் தேவை. ஆண்டவர் இயேசு அவருடையப் பணியைச் செய்யும் உதவியாளர்களாக நம்மை நம்பியிருப்பதால், நம்முடைய சாட்சியம்மிக்க வாழ்க்கையின் வழியாக, கிறிஸ்து மாட்சி பெறுவார்.

நம் வாழ்வின் மூலம், உலக மக்களின் மனதில் கிறிஸ்துவை உறுதியாக வாழவைப்போம். கிறிஸ்தவர்களாகிய நாம், நம் காலத்தில் கடவுளின் நன்மை மற்றும் அன்பின் தொடர்பாளர்களாக இருப்போம். ✣

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா: 66: 10-14;

திபா: 66: 1-7, 16, 20;

கலாத்தியர்: 6: 14-18;

லூக்கா: 10: 1-12, 17-20 (அ) 10: 1-9.

INTERNAL CIRCULATION ONLY
BUL 27/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

3 ஜூலை 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 14 ஆம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:** ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் தினம் (ஜூலை 24)**

# அமைதியின் தூதுவர்களாக இருங்கள்

தூதுரைக்கும் பணிக்காக தூதுவர்களை திருஅவை அனுப்புவது மிகவும் அவசரமானது; மேலும் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அது தொடர்கிறது. முதல் வாசகமான எசாயா புத்தகத்தில், கடவுள் ஒரு அன்பான, மென்மையான, தம் மக்களுக்குப் பாதுகாப்பும் ஆசீரையும் வழங்குபவராகப் பார்க்கிறோம். அளவிடமுடியாத ஆசீரை அவர் வாக்களிக்கின்றார். " ஆறுபோல் நிறைவாழ்வு பாய்ந்தோடச் செய்வேன்; பெருக்கெடுத்த நீரோடை போல் வேற்றினத்தாரின் செல்வம் விரைந்து வரசெய்வேன்" நீடித்த ஆறுதலும் நிலையான அமைதியையும் வாக்களிக்கின்றார். தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல், நான் உங்களைத் தேற்றுவேன் என்று கூறுகின்றார்.

